16.04.2026 MCOP No.42/2023

சாட்சி : PW 1 பாண்டி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

1. 06.04.2022ம் தேதி முதல் 04.05.2022ம் தேதி வரை புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் விடுவிப்புச் சான்று அசல் **ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. மனுதாரர் பாண்டியின் ஊனச்சான்று நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. மனுதாரர் பாண்டியின் எக்ஸ்–ரே நகல் **ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**குறுக்கு விசாரணை:**

1. விபத்து நடக்கும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் அதிகாலை 03.30 முதல் 04.00 மணியிருக்கும். நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் யாருக்குச் சொந்தமானது என்றால் என்னுடைய வாகனம் தான். விபத்து சமயத்தில் நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்திற்கு இன்சூரன்ஸ் கிடையாது என்றும், எனக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல, ஓட்டுநர் உரிமம் இருந்தது, இன்சூரன்ஸ் இல்லை. விபத்து ஏற்பட்ட எனது வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வின்போது நான் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் எனக்கு விபத்து சமயத்தில் நான் சிகிச்சையில் இருந்தேன். மோட்டார் வாகன ஆய்வின் போது நான் சிகிச்சையில் இல்லை என்றும், அதனால் தான் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் என்ன வகையானது என்றால் டிவிஎஸ் எக்சல் வாகனம் ஆகும். விபத்து சமயத்தில் நான் எங்கிருந்து எங்கு சென்று கொண்டிருந்தேன் என்றால் அமராவதியில் இருந்து தேவகோட்டைக்கு சென்று கொண்டிருந்தேன்.

2. நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் முகப்பு விளக்கு மூலம் 50 முதல் 100 அடி தூரத்தில் உள்ள வாகனத்தை பார்க்க முடியும் என்று சொன்னால் சரிதான். எனக்கு முன்னால் இருந்த லாரியை நான் எத்தனை அடி தூரத்தில் பார்த்தேன் என்றால் பக்கத்தில் சென்ற போதுதான் பார்த்தேன். சாலையின் இடதுபுறமாக நின்று கொண்டிருந்த லாரியின் பின்புறம் நான்தான் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நின்றுகொண்டிருந்த லாரியின் மீது மோதி விபத்து என்னுடைய கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தின்போது 1ம் எதிர்மனுதார் சரியான சமிக்ஞை செய்துதான் வாகனத்தை நிறுத்தியிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாததால் நான் வாகனத்தை முறையாக ஓட்டிச் செல்லாமல் என் கவனக்குறைவின் பேரில் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

3. என்னிடம் ஓட்டுநர் உரிமம் உள்ளது என்று நான் சொல்லியுள்ளதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் விபத்தின்போது அது தொலைந்துவிட்டது. நான் அதை மீண்டும் வாங்க நடவடிக்கை எதுவும் மேற்கொண்டேனா என்றால் இல்லை, நான் சிகிச்சையில் இருந்ததால் அதை வாங்கவில்லை. விபத்தால் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்தின்போது நான் தலைகவசம் அணியவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தின்போது நான் தலைகவசம் அணிந்திருந்தால் தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் என்ன வேலை பார்த்துவந்தேன் என்றும், என்ன சம்பளம் வாங்கிவந்தேன் என்பதை காண்பிப்பதற்கும் என்னால் எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

4. மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்பு நான் தொடர் சிகிச்சை எடுத்ததற்கான ஆவணம் எதுவும் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு விபத்தின்போது ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சரியாகிவிட்டதால் தான் மேற்படி சிகிச்சை மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல, நான் போன மாதம் வரையில் சிகிச்சை மேற்கொண்டுதான் வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.10

ஆவணம் யார் கொடுத்தார்களோ அவர்களை விசாரணை செய்தால்தான் அந்த ஆவணம் எதற்காக கொடுக்கப்பட்டது என்ற விபரம் தெரியவரும் என்று சொன்னால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் பூரணமாக குணமாகிவிட்டது என்றும், எனக்கு எவ்வித ஊனக்குறைபாடும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த விபத்தினால் எனக்கு எவ்வித வருமான இழப்பீடும் ஏற்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.